RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222933

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் தோழியின் ஆளுமை

ஆ. அனிதா [அ, *], சோ பத்மாவதி [அ]

[அ] தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Personality of a Friend in Sangam Literature

A. Anitha [a, *], S. Padmavathi [a]

[a] Department of Tamil, PSG Arts And Science College, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: anithaarumugam13@gmail.com

Received: 22-09-2022
Revised: 17-11-2022
Accepted: 24-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

In India, families face various social problems because of love. It is a manifestation of extreme ignorance that both men and women get used to postponing marriage and rejecting marriage, not only causing mental distress but also losing their lives. In this era, it is very difficult to carry one's love life to marriage life. So every lover can approach psychologists nowadays to resolve the differences in their love marriage. But if we analyze the sangam literary songs thoroughly, the friend is the medicine that can solve the psychological problem between lovers. Friend is a female character who stands between the hero and the heroine and gives the necessary advice. How does her personality fit into the contemporary era? This article explores all this in detail.

**Keywords:** Sangam Literature, Friend, love, Personality, Social problems

## முன்னுரை

இந்தியாவில் காதல் பிரச்சனை காரணமாக குடும்பங்கள் பல்வேறு விதமான சமூக சிக்கல்களுக்கு உள்ளாகின்றன. ஆண், பெண் இருபாலரும் பழக்கிவிட்டு திருமணத்தை தள்ளிப்போடுவது, திருமணத்திற்கு மறுப்பு தெரிவிப்பது போன்ற செயல்களினால் இருவருமே மன உளைச்சலுக்கு ஆளாவது மட்டுமல்லாமல் உயிரையும் விட்டுவது விடுவது உச்சகட்ட அறியாமை வெளிப்பாடு ஆகும்.

இக்காலத்தில் தன்னுடைய காதலை திருமணம் வரையிலும் கொண்டு போவதே மிகக் கடினமாக செயல்களாவே உள்ளது. எனவே ஒவ்வொரு காதலர்களும் தன் காதல் திருமணத்தில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை சரி செய்ய தற்காலத்தில் உளவியல் நிபுணர்களை அணுகி தீர்வு பெற முடிகின்றன. ஆனால் சங்க பாடல்களை தீர ஆய்வு செய்தால் தோழியே உளவியல் ரீதியான அப்பிரச்சனையை தீர்க்க கூடிய மருந்தாக இருந்துள்ளாள். தலைவன் தலைவி இருவருக்கும் இடையே ஏற்படும் உளச்சிக்கலை நடுவு நின்று ஆராய்ந்து தேவையான அறிவுரை கூறும் பெண் ஆளுமையாக திகழ்கிறாள் தோழி. அவளின் ஆளுமைத்திறன் சமகால சுழலுக்கு எவ்வாறு தேவை என்பதை பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## அகநானூறு

அகநானூறு அகத்திணை சார்ந்த நூல் என்பதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. இது பல்வேறு புலவர்கள் வெவ்வேறு

காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். அகத்தொகையுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் இதனை, நெடுந்தொகை என்றும் கூறுவர். இத்தொகையைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகிழார் மகனார் உருத்திரசன்மர். இதனைத் தொகுப்பித்த மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியார். இவை களிற்றியானை நிரை (120) மணி மிடை பவளம் (121-300) நித்தலக் கோவை (301-400) என மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## குறுந்தொகை

குறுந்தொகை எட்டுத்தொகையில் உள்ள நூல்களுள் ஒன்று. இந்நூல் எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்துச் சுட்டும் பழம்பாடலில் எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது. இந்நூல் குறைந்த "நல்ல குறுந்தொகை ஏனைய பழந்தமிழ் அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயா பெற்றது. ஏனைய பழந்தமிழ் நுல்களைப் போல் இதுவும் 400 பாடல்கனிக் தொகுப்பாக இருந்திருக்க வேண்டுமென்றும் ஒரு பாடல் இடைச் செருகலாக இருக்கக்கூடுமென்றும் சிலா கருதுகிறார்கள். உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக அதாவது 235 பாடல்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஆதலால் இந்நூலே முதலில தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இது பலவகையிலும் நற்றிணை, அகநானாறு ஆகிய பாடல தொகுப்புகளை ஒத்த இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ எனினும் தொகுப்பித்தவர் பெயர் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆளுமை

ஆளுமை என்பது ஒருவரது ஒழுங்கமைந்த இயங்கியல் பண்புகளும் அவை தோற்றுவிக்கும் நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளை குறிக்கிறது. ஆளுமை என்பது ஒருவரை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்டக்கூடியது. ஒருவன் தனது தனித்தன்மை வாய்ந்த நடத்தையைத் தன்னை சூழ்நிலைக்கு ஏற்ப அமைத்துக் கொள்வதே ஆளுமை எனப்படுகிறது. சங்க இலக்கியத்தில் தோழி ஆளுமைத்திறன் சமூகத்தில் பிறரிடமிருந்து வேறுபட்டவளாகக் காணப்படுகிறாள். தோழி இத்தகு பண்பு நலன் சமூக சீர்க்கேடுகளை சரி செய்வதாக இலக்கிய நெடுக்கிலும் காணப்படுகிறது.

## ஆளுமையும் அறிஞர்களும்

ஒருவனுடைய நுண்ணறிவு, சுபாவம், திறமை மற்றும் எண்ணங்கள் ஆகியவற்றின் நிலையே ஆளுமையாகும். ஒரு தனி மனிதனின் தனித்தன்மையான நடத்தையினையும் சிந்தனையையும் முடிவு செய்கின்ற அவனுடைய உள, உடல் அமைப்பே ஆளுமை எனப்படுகிறது. ஒரு தனிமனிதனுக்குரிய உள செயல்பாடுகளும் உளநிலைகளும் கொண்ட மொத்த அமைப்பே ஆளுமை. அறிஞர்தம் கூற்றின் வாயிலாக ஆளுமை என்பது ஒருவனது வலிமை மனோபவத்தையும் கூர்மையான மதிநுட்ப அறிவை அறிய முடிகின்றது. சங்க இலக்கியத்தில் தோழியின் அறிவு வளம் மற்றும் நுட்பமாக சிந்திக்கும் வினையாற்றலும் தோழி ஆளுமை பண்பை வெளிக்கொணர வரைவு கடாவுதல் பாடல்கள் உறுதுணையாக இருக்கிறது.

## வரைவு கடாதல்

பகற்குறியிலும், இரவுக்குறியிலும் ஈர்க்கப்பட்ட தலைவன், வரைவில் நாட்டமின்றி களவொழுக்கத்தையே விரும்பி வாழ்பவனாக இருந்திருக்கிறான்.

## குறிஞ்சித் திணையில் வரைவு கடாதல்

வரைவு நீட்டித்த இந்நிலையில் தோழி பல்வேறு நிலைகளையும் சூழல்களையும் எடுத்துக்கூறித் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துவாள். இதுவே வரைவு கடாவுதல் ஆகும். காதலின்

அடுத்தக்கட்ட உறவு நிலைக்கு வழித்தேடும் தலைவியும் தோழியும் திருமணத்தின் மீது விருப்பம் கொள்வர். வரைவு என்பது திருமணம், கடாவுதல் என்பது தூண்டுதல் ஆகும். தலைவனிடம் நேரடியாகவோ குறிப்பாகவோ மணம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துவதாகவே அமைகிறது. வரைவு கடாவுதலில் தோழியின் ஆளுமைத் தன்மை மேலோங்கி இருப்பதே அறிய முடிகிறது.

## தோழியின் சிறப்பு

சங்கப் பாடல்களில் தலைவன், தலைவி ஆகிய பாட்டுடைத் தலைமக்களுக்கு அவர்களின் செயல்பாட்டுக்கு உறுதுணையாய் விளங்குபவள் தோழி. தொல்காப்பியத்திலும் சங்க சான்றோர் தம் இலக்கியப் படைப்புகளில் குறிப்பிடப்படும் தோழி அறிவு, அழகு ஆற்றல் முதலியவற்றால் தலைமகளோடு ஒத்த சிறப்புடையவளாக தலைவிக்கு உற்றுழி உதவும் நட்பினளாக விளங்குகின்றாள். தோழியின் நோக்கத்தை,

'களவு நீள வேண்டும் என்பதும், காதலாயினர் இருவகைக் குறிகள் நிகழ்த்த வேண்டும் என்பதும் அகத்திணையின் நோக்கம் இல்லை. பால் வயத்தால் தாமே கண்டு தம்முட் புணர்ந்த களவுக்காதலர்கள் கற்பாக வேண்டும், வெளிப்படையாக மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதே அதன் நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்ற வருபவளே தோழி".(வ.சுப. மாணிக்கம், 2009).

தோழி தலைவியின் ஒத்த வயதும் உணர்வும் உடையவள் இருப்பினும் கடமையுணர்ச்சி நிறைந்தும், பாலுணர்ச்சியைக் காட்டாமல் அறிவு நுட்பத்தோடு வாழ்பவள். உலகியல் உணர்வில் அறிவு நிறைந்தவள் என்பதை அறிய முடிகின்றது. தோழி வரைவு கடாதலில் இந்த ஐந்து துறையில் தன் னுடைய சொல் ஆளுமையை வெளிப்படுத்துகிறாள்.

## வரைவு கடாதலில் தோழி பேசக் காரணங்கள்

### தோழியின் சொல் ஆளுமை

தலைவனும், தலைவியும் இரவு நேரத்தில் களவில் சந்தித்துக் கூடி மகிழும் இடம் இரவுக்குறி எனப்படும். பகலில் நிகழும் கூட்டம் ஊர் புறத்தேயும், இரவில் நிகழும் கூட்டம் இல்லத்தின் புறத்தேயும் நடைபெறும். தொடர்ந்து இரவில் வரும் தலைவனை தடுக்கவும் விரைவில் மணம் செய்து கொள்ளுமாறும் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் விளம்பிகிறாள் தோழி. இதனை இரவுக் குறி மறுத்தல் என்று கூறுவர்.

தோழியும், தலைவியும் இரவுக் குறி மறுப்பதற்கான காரணம் தலைவன் வரும் வழி விலங்குகள் நிறைந்த கொடுமையான பாதை உடையதாகவும், காட்டாற்று வெள்ளமும், அணங்கும் போன்ற இடையூற்று காரணமாக தலைவன் உயிருக்கு ஆபத்து நேரிடுமோ என்று அச்சம் கொள்கிறாள் தோழி.

“தொன்று இயல் மரபின் மன்றல் ஆயா,

பெண் கோள் ஒழுக்கம் கண் கொள நோக்கு

நொதுமலர் விருந்தினம் போல, இவள்

புதுநாண் ஒழுக்கமும் காண்குவம், யாமே” (Jayapal, 2004)

“ஈன்றணி இரும்பிடி தழீஇ, களிறுதன்

தூங்குநடைக் குழவி துயில் புறங் காப்ப,

ஒருங்கு அளை புலம்பப் போது, கடுங்கண்

வாள்வரி வயப்புலி கல்முழை உரற”, (Jayapal, 2004)

“உத்தி அரவின் பைத்தலை துமிய

வர வரும் உரறும் உட்குவரு நனந்தலை" ((Jayapal, 2004)

இப்பாடலில் தலைவனை உடனே திருமணம் செய்து கொள்ள விரும்பினாலும் செய்து கொள் இனிமே இரவுக்குறி வராதே என்று தோழி சொல் வன்மை முன்னுறுத்தக் காண்கிறோம். இந்த சூழ்நிலைகளில் சொல்லை வெளிப்படுத்துவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும், கட்டுப்படுத்துவதிலும் தான் தோழியின் ஆளுமை தன்மை வெளிப்படுகிறது. இச்சொல்லாடலை ஆயுதமாக பயன்படுத்தி திருமண நிகழ்விற்கு கருவியாக அமைந்துள்ளாள் தோழி. களவில் ஏற்படும் பிளவிற்கு தோழி செயலை வ.சுப. மாணிக்கனார் 'களவொழுக்கம் தீடீரென நின்று போவதற்கு இடனுண்டு தோழியின் உறுதுணையல் அது நீடித்து ஒடுகின்றது. தோழி பெண்ணாயினும் பணி மகளாகலின், தலைவியைவிடத் தனித்துச் செல்லும் உரிமையும், கடமையும் அவளுக்கு உண்டு காதலோர்தம் கூட்டத்துக்குத் தகும் இடம் எது? தகுங்காலம் எது? என்று அவளால் காண முடியும் எனினும் அவளும் ஒரு குமரியாதலானும் ஏவல் மகளாதலானும் எல்லைக்கு உட்பட்டே உதவி செய்யக் கூடும் (Manikkam, 2009).

அக்காலம் தொட்டு இக்காலம் வரை காதல் என்ற ஒன்று நம் வாழ்வில் பயணித்துக்கொண்டே தான் இருக்கிறது. சங்க காலத்தில் தோழியின் ஆளுமையினால் பல காதல் வெற்றி பெற வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்றைய காலக் கட்டத்தில் அந்த வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது என்பதே உண்மை. ஒரு மனிதன் முன்னேற அவன் வயதில் உள்ள நல்ல தோழனும், தோழியும் தேவை. உள்ளத்து உணர்வுகளை வெளிப்படையாக பெற்றோரிடம் பகிர்வது என்பது முடியாத செயலாகும். சங்க இலக்கியத்தில் வலம் வரும் தோழி போல இக்காலத்தில் இருந்தால் பல காதல் பிரச்சனைகள் வர வாய்ப்பில்லை. தற்காலத்தில் தோழிகள் பிரச்சனைகளிலிருந்து ஒதுங்கி இருப்பதும், தவறான ஆலோசனைகளை தருவதும் சமூகத்தில் பல சிக்கல்களை உருவாகின்றன.

## கட்டுக்காவலின் தன்மை

தலைவியை அன்னை அல்லது தந்தை, மற்றும் நகர் காவலர் (வேட்டுவர்) கண்காணிப்பில் வைப்பது ஆகும். இவர்களை மீறி தலைவினை சந்திக்க முடியாது. "உடன் போக்குப் போன்ற நிகழ்வுகள் அறவே வேண்டி அற்றைச் சமுதாயம் சில நடைமுறைகளை மேற்கொண்டது அவற்றுள் ஒன்று, பெண்களை வெளியேவிடாது இல்லத்தில் வைத்துக் காத்தல் ஆகும். இதனை அப்பாடல்கள் இச்செறித்தல் என்ற பெயாில் பதிவு செய்துள்ளன. இற்செறித்தல், புறமண உறவில் தடை ஏற்பட்டதன் வளர்ந்த நிலையைக் காட்டுகின்றது எனலாம்" (Selvaraj, 2016).

தலைவனும் சந்திக்க வந்தால் அதனால் ஏற்படும் அலர் மற்றும் தலைவனின் பாதுகாப்பு கேள்வி குறியாகிறது. தலைவன் கட்டுகாவலை மீறி சந்தித்து இன்புறுவதற்கு விரைந்து திருமண செய்து இன்புறுவாய் என்று அறிவுரை கூறுவது வரைவு கடாவுதலின் காரணம் அமைகிறது. தலைவி தினைப்புனம் காக்கும் பகல் வேளையில் தலைவன் வந்து தலைவியுடன் இருந்துவிட்டு மீண்டான் பெற்றோரின் கட்டுக்காவல் தலைவிக்கு அதிகமாயிற்று. 'இரவில் வரும் தலைவனை தோழி அதை மறுத்து மணம் செய்துகொண்டு வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகிறாள். இரவில் தலைவியை எவ்வாறு பாதுகாத்துள்ளனர் என்பதையும் காவலர் பணியையும்,

"யாமம் காவலர் அவய மாறே" (Somasundarananr, 1955)

என்ற பாடலில் காவலர்கள் உறங்காமல் இருக்க இரவு முழுவதும் பறை முழங்கும் என்பதை அறியமுடிகின்றன. இப்படிப்பட்ட கடுமையான காவலின் போது தலைவன் வந்து சிக்கிக் கொண்டலும், அது தலைவிக்கு தான் இன்னும் மன வருத்ததை ஏற்படுத்தும் என்று அறிந்து இருவருக்கும் பிரச்சனை ஏற்படாத வகையில் தோழியின் செயல்பாடு இருந்துள்ளது.

## அன்னைக் கட்டுக்காவல்

தலைவன் கட்டுக்காவலை எல்லாம் மீறி இரவில் இல்லத்தின் கதவை தட்டும்போது தலைவி அறியாமல் இல்லை. மயில் வலையில் அகப்பட்டது போல, தலைவியை நற்றாய் கட்டி அணைத்து

தழுவிகின்றாள். அதனால் அவளால் வர முடியவில்லை. இனி அவளை காண்பது அரிது விரைவில் திருமணம் செய்துகொள் என்று,

"நன்மயில் வலைப்பட்டாங்கு, யாம்

வயங்கு தொறும் முயங்கு அறனில் மாயே" (Somasundarananr, 1955)

இப்பாடலின் மூலம் தலைவனின் மனம் புண்படா வகையிலும், கட்டுக்காவல் மிகுதியாக இருப்பதை புலப்படுத்துகிறாள்.

## தந்தையின் கட்டுக்காவல்

தந்தை காவல் செய்யும் நகர் பெரும் துன்பத்தை செய்கின்ற குளிர்ச்சி நிறைந்த பக்கமலையிலுள்ள தெய்வ மகளிர் வாழும் மாங்காடு போல காப்பு உடையது. இதனை,

"மகளிர் மாங்காட்டு அற்றே - துகள் அறக்

கொந்தோடு உதிர்த்த கதுப்பின்

அம்தீம் கிளவித் தந்தை காப்பே" (Jayapal, 2004)

மேலும், தலைவியின் தந்தை காவல் செய்யும் பகுதி அகன்ற நகரில் தூங்காத காவலர்கள் ஒய்வெடுக்கும் நேரத்தில் நீ வருவது இமைகள் மூட கண்களோடு காத்து இருப்பது பெரும் துன்பம் தருகிறது. இத்துன்பம் தலைவி வேண்டாம் என்று விரைவில் திருமணம் செய்து நேர்வழி வந்து இன்புறுக என்று சொல்வதாக.

"துஞ்சாக் காவலர் இகழ்பதம் நோக்கி

இரவின் வரூஉம் அதனினும் கெடியதே

வைகலும் பொருந்துதல் ஒல்லாக்

கண்ணொடு வாரா என் நார் இல நெஞ்சே!" (Jayapal, 2004)

இப்பாடலில் எவ்வளவுதான் காதல் கொண்டவராக இருந்தாலும் சான்றோ்ா் பழயோடு வரும் இன்பத்தை விரும்புவதில்லை. நீயோ வானளாவும் புகழ் கொண்டவன். இவள் இன்பத்தை இவளை மணந்து கொண்டு பெறு என்பதையும் அவனுக்கு உரைக்கும் வண்ணம் எடுத்தியம்புகிறாள். இதில் தலைவனுக்கு கோபம் வராமாலும், அவன் ஆண்மைக்கு இகழுக்கு தன் கருத்தை சொல்வதில் தோழி திறமையானவள் என்பதை அறிய முடிகின்றது.

## காமநோய் காரணமாக துன்பம் அடைதல்

தலைவன் பகற்குறி, இரவுக்குறி மட்டும் வந்து செல்கின்றான். தலைவியே தலைவன் மீது உள்ள அன்பால் உடல் மெலிந்து காணப்படுகிறாள். இவள் துன்பத்தை போக்கி விரைவில் திருமணம்; செய்துகொள்ள என்று தோழி தூண்டுகிறாள். தோழி தலைவனிடம் நீ தலைவியின் மேல் அன்பு இல்லாதவனாய் இருக்கின்றாய்! அதை முன்பே அறிந்திருந்தாள் அழகிய மையுண்ட கண்களை உடைய இளமை பொருந்திய எம் தலைவியின் அழகு அழியுமாறு அவள் மேனியில் படராமல் பார்த்திருப்போம் என்பதை.

"குன்ற நாட! நீ அன்பலை ஆகுதல்

அறியேன் யான்! அ்ஃது அறிந்தனென் கயின்

அணி இழை: உன் கண் ஆய் இதழ் குறுமகள்

மணி மாண் நலம் சிதைய!

பொன்நேர் பசலை பாவின்ற மன்னே" (Jayapal, 2004)

மேலும், மற்றொரு பாடலில்

"சிறுக்கோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்

உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (Somasundarananr, 1955)

தலைவன் நாட்டில் வளர்ந்துள்ள பலாவின் சிறிய கொம்பில், பெரிய பழம் எவ்வகை பற்றுக் கோடுமின்றித் தானே பழத்து தொங்குவது போல இத்தலைவன் உயிராகிய கொம்பு, மிகவும் பெரிதாய் உள்ளது. இதை உன்னை தவிர வேறு யாராலும் அறிய முடியாது. நீ அவளை நுகர்ந்து விரைவில் நற்செய்தியை கூறுவாயாக என்று காம நோய் காரணமாக வரைவு கடாவுதல் சூழலில் வருகிறது என்பதை அறிய முடிகின்றது. தோழி தலைவியின் உடல் நலம் கெடும் போது அவளின் சொல் வன்மை கடுமையாகவும் கோபம் உடையவளாக மாறுகிறாள் என்பதை அறிய முடிகிறது.

## அலர் காரணமாக வரைவு கடாயது

தலைவன் தலைவியரை நன்கு அறிவாள் தோழி. இவர் தம் உறவைப் பழத்து அலர் கூறும் ஊரவர் வாய்மொழியை உற்றுக்கேட்டு அறியும் பாங்குடையவள். தலைவன் தலைவியை சந்திக்க இராபொழுதில் வருவதை உறவினர் கண்டால் தலைவிக்கு அலா் ஏற்படும் என்று தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவன் இரவு நேரத்தில் வந்தால் மரங்கள் அசைவதைக் கண்டு களிறு வந்தாக கருதி ஆர்ப்பாித்தனர் என்பதை

"களிறு என ஆர்ப்பவர், ஏனல் காவலரே

ஆர மாா்பினை, அண்ணலை அறியை

ஐது அகல் அல்குலான் செய்குறி நீவாின்

புலி என்று ஓர்க்கும் இக்கலி கேழ்வளரே" (Puliyur Kesigan, 2010)

இப்பாடலில் காவலர் காப்போா் தீப்பந்தங்களையும், கல், கவண், வில்லையும் எறிந்து சத்தமிட்டனர். பலரும் பாராட்டும் சிறந்த அறிவு உடையளே! சான்றோா் அறிந்து அலர் ஏற்பட்டால் தலைவி உயிா் வாழ மாட்டாள் என்ற கருத்தின் மூலம் விரைவில் திருமணம் செய்து கொள் என்று அறிவுரை கூறுகிறாள் தோழி. களவிலேயே இன்பம் பெற்று கொண்டு இருக்காமல் விரைவில் திருமணம் செய்து கற்பில் இன்பத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டவளாக இருக்கிறாள். தலைவன் தலைவியரை நல்வழிப்படுத்தவும், தீமை ஏதும் வாராவண்ணம் காக்கவும் வல்லவள் தோழி என்பதை இப்பாடல் வழியே அறிய முடிகிறது.

## முடிவுரை

தோழி சங்க அகவாழ்வில் நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிவாற்றலோடு தலைமாந்தாின் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்றுவதில் போிடம் பெறுகிறாள். தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும் அதை நிலை நிறுத்தவும் தன் அறிவையும் செயலாற்றலையும் கருவியாகக் கொள்கிறாள் தோழி. அவளுடைய சொல் ஆளுமையில் தலைவன் காலம் தாழ்த்தும் எண்ணத்தை தன் சொல்வழி ஒழுகச் செய்யும் திறன் பெற்றவளாகிறாள் என்பது புலாகிறது. தோழி செயல்பாட்டினால் காதல் பிரச்சனைக்கு சங்க காலத்தில் நீதிமன்றங்களில் தேவைபடாமல் இருந்துள்ளன. இப்போது சாியான தோழர் அமையாவிடின் நாட்டின் பல்வேறு இடங்களில் விவகாரத்து வழக்கு பல்கி பெருக்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஆண்கள் காதல் தோல்வியால் மது, மாது, போதை பழக்கம், குடும்பத்தில் விலகி தவறான பாதையில் செல்லுவது, பெண்கள் தவறான முடிவு எடுப்பதும் விலைமகளிா் ஆவதும் நாட்டையும் வீட்டையும் சீர்க்குலைக்கும் வகையில் தற்காலத்து இளைஞர்

வாழ்க்கை அமைகிறது. சங்க காலத்தில் இருக்கும் தோழியை போல இக்காலத்தில் அமைந்து இருந்தால் பல பிரச்சனைகளுக்கு வழியே இல்லாமல் போய் இருக்கும் என்பதை அறிய முடிகின்றது.

## References

Jayapal, R. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Manikkam, V.S. (2009) Tamil Kadhal, Sree Hindu Publication, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Kalithogai, Shri Senbaga Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2022) Natrinai, Bharathi Pathippagam, Chennai, India.

Selvaraj, N. (2016) Thol Tamilar Thirumanamuraikal, Kalachuvadu, Nagarkovil, India.

Somasundarananr, P.V. (1955) Kurunthogai, South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunelveli, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License